பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞு வைகாசி மீ 21 உ செவ்வாய்க்கிழமை (04-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 182

# இந்திய புலனாய்வுக் குழுவின் கொழும்பு விஜயம் தோல்வி!

## துப்பு ஏதும் இடைக்காத நிலையில் இன்று புதுடில்லி திரும்புகிறது

கொழும்பு, ஜூன் 4

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வந்திருந்த இந்திய புலனாய்வுக் குழுவின் கொழும்பு விஜயம் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

கொழும்பில் ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் நடந்த பேச்சுக்களின் போது எதிர்பார்த்த அளவு எந்தவித தடயங்களும் புலனாய்வுக் குழுவுக்குக் கிடைக்கவில்லை. குழுவினர் வெறுங்கையுடன் இன்று புதுடில்லி திரும்புகின்றனர் என்று கொழும்பில் ஸ்ரீலங்கா அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்ட பெண் ஈழத்தைச் சேர்ந்த போராளி ஒருவரா என்பதை கொழும்புப் பேச்சுகளின் போது புலனாய்வுக் குழுவினரால் கண்டு பிடிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ரெலோ மற்றும் புளொட் ஆகிய இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் இந்தியப் புலனாய்வுக் குழுவினர் பேச்சு நடத்தினர் என்றும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் காந்தி கொலைக்கு விடுதலை புலிகளே காரணம்!

### இந்தியப் பிரதமர் குற்றச்சாட்டு

ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம்.

— இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''லண்டன் ஒப்சேவர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பில் ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது என்று பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

''ராஜீவ் காந்தியின் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்ற கேள்விக்கு இடமில்லை. அவர்களே சம்பந்தப்பட்டுள்ளார்கள்''— என்று சந்திரசேகர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

[உ-8]

## தமிழகத்தில் கைதான 6,200 பேரும் விடுதலை

சென்னை, ஜூன் 4

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகத்தில் கைதான சுமார் 6,200 பேரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்று தமிழக தலைமைச் செயலாளர் ரி.வி அந்தோனி சொன்னார்.

## உன்னிச்சைத் தாக்குதலில் மூன்று படையினர் பலி!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

மட்டக்களப்பு மாவட்டம் — உன்னிச்சை முகாமில் இருந்து வெளியேறி ஆயித்தியமலையை நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இத்தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை 8-45 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விவரம் வருமாறு:

★ ஏ. கே. எல் எம். ஜி. ரகத் துப்பாக்கி — 1
★ ரம் மகஸின் — 3
★ ரவைக்கோர்வைகள் — 300
★ ரி 56-2 ரகத் துப்பாக்கி — 1
★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 4
★ நடுத்தர ரவைகள் — 350

இந்தச் சம்பவத்தில் லெப். இளக் (பேசாதீவு), இரண்டாவது லெப். வில்வம் (அம்பலந்துறை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

[இ-8]

## கி. சே. அலுவலர் பதவிகளை நிரப்ப முடியாது தடங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கிராம சேவையாளர் பதவிகளுக்கு பெரும் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் இருந்த போதிலும் அவற்றை நிரப்ப முடியாத நிலை எழுந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள எட்டு மாவட்டங்களிலும் கிராம சேவையாளர் பதவிகள் பெருமளவில் வெற்றிடமாக உள்ளன.

அவற்றை நிரப்புவதற்கு மாகாணசபை நடவடிக்கை எடுத்து வந்தது. போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்துவதற்கும் திட்டமிட்டது.

ஆனால் போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களமே ஒழுங்குகளைச் செய்யவேண்டும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேச மன்னிப்பு சபையின் பிரதிநிதிகள் குழு கொழும்பில்

### கிழக்கு செல்ல அனுமதிக்கப்படுவது சந்தேகமே!

யாழ்ப்பாணம், ஜூன் 4

சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக்குழு ஒன்று கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்தது. சித்திரவதை, காணாமற்போதல், மர்மக் கொலைகள் என்பன குறித்து சபைக்குக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்து தூதுக்குழுவினர் நேரில் கண்டறிவர்.

பதினாறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் வெளியேற்றப்பட்ட பின்னர்—

இப்போது தான் சபையின் தூதுக்குழு ஒன்று இலங்கை வந்திருக்கிறது.

கொழும்பு வந்திருக்கும் தூதுக்குழுவினர் இப்போது அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிவருகின்றனர்.

எனினும் கடந்த ஒரு வரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி இவ்வருடம் இங்கு கிடைக்குமா?

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகிவிட்டது.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி சேர்ந்த தேர்தல் மாவட்டத்தை பத்து எம் பிக்கள் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

பாம் செலவும், தனது திணைக்களத் தலைவர்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



ஐய்ய... வெறுங்கையோடு இந்தியப் புலனாய்வினர் ...

## தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 பேர் இன்று விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 4

பல்வேறு காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 பேர் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகத்தில் வைத்து விடுவிக்கப்படுகின்றனர்.

விடுதலையாகும் 23 பேரின் விவரம் வருமாறு:-

1 மரியதாஸ் பீலிக்ஸ். ஜெயராஜா - குருநகர் 2. ஆறுமுகம் சந்திரமோகன் - யாழ்ப்பாணம் 3. ஜெகநாதன் ஜெயக்குமார் - யாழ்ப்பாணம் 4. மூருகுப்பிள்ளை கந்தசாமி - முள்ளியவளை 5 தவலிங்கம் சண்முகம்- யாழ்ப்பாணம் 6 தாமோதரம்பிள்ளை மோகனதாஸ் -திருமலை (தற்பொழுது நவாலி நல்லதம்பி வளவு) 7. பொன்னம்பலம் பாஸ்கரன் - ஊாவிளான் 8 விக்ரர் றேமன் - குருநகர் 9.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் தானே வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் ரெயிலர் உடன் தேவை. தகுந்த சம்பளம் தரப்படும். உடன் நேரில் வரவும். திருமகள் தையல் நிலையம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு. [17029]

## தவறிவிட்டது

இராசா ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய எனது அடையாள அட்டை [633032068V] 26 - 5 - 91 இல் புளியங்குளத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். [17036]

## இரசாயனம்

A/L 92 Inorganic SPD வகுப்பு ஆரம்பம் 4 - 6 - 91 செவ்வாய்க்கிழமை காலை 6-30. அமைப்புக் கட்டுரை வடிவ வினாத்தாள்களைக் கொண்ட நூல் தொகுதி வெளிவந்து விட்டது. ஆசிரியர் சந்திரன், 108, Brown Road. [17032]

## வைத்திய நிலையம்

புளியங்கூடல் வேலணையில் இயங்கிவந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மாவிட்டபுரம் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் [ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்] இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. இவசம்பு. [16967]

## ஜோதிடம்

ஜாதகங்களிலுள்ள கிரக நிலைகள் சரியில்லாததால் சிம்மராசி தலைவர்கள் ராஜீவ் காந்திக்கு உயிராபத்தையும், ஜெயலலிதாவிற்கு முதல்வர் பதவியில் ஸ்திரமின்மையையும் கொடுக்குமென முன் கூட்டியே வெளியிட்டிருந்தோம். ஜாதகங்களின் கணிப்புகள் ஜோதி நூல் வெளியீடுகள் பேராசிரியர் சத்தியசுவன் ஞானம்டன், சித்தன்கேணி. [சி/0035]

## இரங்கற் திருப்பலி

ஜே. பி. லி.

### பிலிப்ஸ்

31-05 91 இல் காலம் சென்ற வைத்திய கலாநிதி ஜே பி ஸி பலிப்ஸ் (ஜே பி யு எம் அகில இலங்கை, உரிமையாளர் பலிப்ஸ் நேர்ஸிங் ஹோம், யாழ்ப்பாணம்) அவர்களின் ஆத்ம சாந்திக்காக 04 - 06 - 91 செவ்வாய்க்கிழமை மாலை 4 30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை இறைஞ்சும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி அன்ரனியா-அன்ரனிப்பிள்ளை (சகோதரி)
28, திருறல் வீதி, யாழ்ப்பாணம். [17044]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 20 - 08 - 1924

ஆண்டவன் அடியில்: 05 - 05 - 1991



## அமரர் அந்தோனி சவிரி

'சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

கிளிநொச்சியில் எம் இல்லத்திற்கு வருகை தந்து துன்பத்தில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் சில்லாலையில் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோர், உதவி அளித்தோர் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

156 ஆம் கட்டை,
கண்டி வீதி, கிளிநொச்சி [17043]

---

# 31 ஆம்நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 27 - 03 - 1942

விண்ணில்: 05 - 05 - 1991



திருமதி

## கமலாம்பிகை தங்கராசா

1975 ஆம் ஆண்டு வரை பதின்னான்கு வருடங்கள் யாழ். ஆஸ்பத்திரியிலும் 1991 வரை 16 வருடங்கள் லண்டன் ஆஸ்பத்திரியிலும் அன்புத் தாதியாகச் சேவையாற்றி அன்பின் திருவுருவாய், குடும்பத்தின் குலவிளக்காய், இனிய தாயாய், அன்பு கனிந்த சகோதரியாய் எமக்கெல்லாம் வேண்டிய உதவிகள் செய்து எம்மை மீளாத் துயரில் விட்டுப் பிரிந்த எங்கள் குலமகளே!

உமது ஆன்ம சாந்திக்காக எங்கள் குல தெய்வம் அன்னை காளியைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவை மறவாத:
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. [4123]

---

# ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 26 — 05 — 1927

ஆண்டவன் அடியில்: 27 — 05 — 1989

திதி: 04 — 06 — 1991



அமரர்

## செல்லையா சிதம்பரப்பிள்ளை

விழுது விட்ட ஆலாய் விளங்கியென ஐவரினை ஈன்றவர்கள் தம்மை இழந்து அழுது நின்று வாடுகின்றோம்.


பிள்ளைகள்.

பலாலி கிழக்கு,
அம்மன் றோட், வயாவிளான். [4104]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1922 — 3 — 22



உதிர்வு: 1990 — 6 — 15

## அமரர் வீ. எஸ் கந்தையா

[ஓய்வு பெற்ற அதிபர்]

எம்மை எல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்:
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கோயிலாக்கண்டி,
கைதடி. [17038]

---

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## இராசரெத்தினம் பரமலிங்கம்

[இளைப்பாறிய தலைமைத் தாதி, யாழ். போதனா வைத்தியசாலை]

மலர்வு: 21 - 06 - 1928

உதிர்வு: 04 - 06 - 1987

அன்பின் உருவாய் அணைத்தே எம்மை இந்நிலைக்காக்க இயன்ற எம் தெய்வமே!
நின்னது ஆத்மா சாந்தியடைய தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் பிரிவால் துயருறும்:
கணவன்: வ. பரமலிங்கமும், பிள்ளைகளும், மருமக்களும், பேரப்பிள்ளைகளும்

குளக்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [17037]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## என்ன தொடர்பு?

பருத்தித்துறை துறைமுகத்திற்குக் கப்பல்கள் தொடர்ந்து வந்து, இலகுவில் உணவுப் பொருள்களை இறக்கிச் செல்வதற்கு அதன் இறங்குதுறையைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியம். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் என்பன இப்போது கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கே கப்பலில் கொண்டு வரப்படுகின்றன. வசதியுள்ள காங்கேசன் துறைமுகத்தைப் பயன்படுத்தக் கூடிய சாத்தியமோ, அல்லது தரை வழி மார்க்கமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டு வரும் சாத்திய நிலையோ இப்போதைக்கு உருவாகப் போவதில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், கொழும்பு அரசு யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை இந்த நாட்டின் பிரசைகள் என்று கருதுமானால், பருத்தித்துறை துறைமுகத்தை, அதன் இறங்குதுறையைத் திருத்தி உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க வேண்டும். வழமையாக அது செய்வது போல, உலகத்துக்கு வெளியில் காட்டிக்கொள்வதற்காக வேனும் இறங்குதுறையைத் திருத்தலாமே?

ஆனால் அரசாங்கம் இவ்விடத்தில் பின்னடிக்கிறது; தயக்கம் காட்டி வருகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள் வழங்க வேண்டிய - புனர்வாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய - புனர்வாழ்வு அமைச்சே, இறங்குதுறையைத் திருத்தலாமா, விடலாமா என்று பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கேட்டிருக்கிறது!

இதனைவிட, வேடிக்கையானதும், விந்தையானதுமான அலுவல், செயல் வேறு என்ன இருக்க முடியும்? இறங்குதுறையைத் திருத்துவதற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் என்ன தொடர்பு?

உணவுப் பொருள்களை அனுப்பும் பொறுப்பு உணவுத் திணைக்களத்தினுடையது. இப்போதைய நிலையில் புனர்வாழ்வுப் பகுதி, அத்தியாவசிய சேவைகள் நூலகப் பகுதி ஆகியனவும் அதில் சம்பந்தப்படுகின்றன. நடைமுறை நிலைமை இவ்வாறிருக்கப் புனர்வாழ்வு அமைச்சு உணவுப்பொருள் இறக்கப்படும் துறைமுக இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கேட்பது ஏன்?

தமிழ்ப் பகுதிகளில் அரசு எது செய்வதானாலும் பாதுகாப்பு அமைச்சின் — படைகளுக்குப் பொறுப்பான அமைச்சின் — அனுமதி பெற்றாக வேண்டும் என்ற நிலையைப் படை அதிகாரிகள் உருவாக்கி விட்டார்கள்!

இது எதனைக் காட்டுகிறது? கொழும்பில் ஆட்சி செய்யும் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளை ஆளவில்லை. முப்படைகளுமே ஆளுகின்றன என்பதையே காட்டுகிறது!! அதாவது வடக்கு — கிழக்குப் பிரதேசங்களை—தமிழர் பிரதேசங்களை — ஸ்ரீ லங்காப் படைகள்தான் நிர்வகிக்கின்றன என்பதைத் தானே பிரதிபலிக்கிறது?

அவ்வாறாயின் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதாயினும், இராணுவ அதிகாரிகளுடன்தான் பேச வேண்டும் என்ற நிலை உருவாகி வருகிறது.

"யு. எஸ். எயிட்ஸ் நிறுவனம் இதனைப் புரிந்து கொண்டு தான்போலும் தான் வழங்க இருந்த நிதியையும் நிறுத்தி உள்ளது!

# முத்தமிழ் விழாவையொட்டி

# மானிப்பாய் விழாக்கோலம்

## நாளை மறுதினம் அங்கு ஆரம்பம்

மானிப்பாய், ஜூன் 4

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முத்தமிழ் விழவுக்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை மானிப்பாயிலும், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நெல்லியடியிலும், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் சாவகச்சேரியிலும், 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்திலும் முத்தமிழ் விழா நடைபெற உள்ளது.

விழா ஏற்பாடுகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அதே சமயம், முத்தமிழ் விழா மானிப்பாயிலேயே முதலில் ஆரம்பமாக இருப்பதை அடுத்து மானிப்பாய் நகரம் களைகட்டத் தொடங்கி உள்ளது.

மானிப்பாய் கனகசபை வீதியில் உள்ள செல்லமுத்து மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி அரங்கில் 6 ஆம் திகதி விழா ஆரம்பமாகும்.

விழாவையொட்டி திறந்த வெளியரங்கைச் சென்றடையும் கனகசபை வீதி, ஜெயக்குமார் வீதி, லோட்டன் வீதி மற்றும் சமீபமாக உள்ள வீதிகள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டு, புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன.

கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென்று சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் புதிதாக ஒரு திறந்தவெளி அரங்கு நிறுவப்பட்டுள்ளது.

கலை நிகழ்ச்சிகளைக் காண வருவோரின் சுகாதார வசதிகளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

### அலங்கார வளைவுகள்

மானிப்பாய் நகரத்தில் உள்ள முக்கிய வீதிகளின் சந்திகளில் பல அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வீதிகளின் இரு மருங்கிலும் மாவீரர்களை நினைவு கூர்ந்து அவர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முத்தமிழ் விழாவை பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் இம்முறை சைக்கிள்களிலேயே வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விழவுக்கான சகல ஏற்பாடுகளையும் மானிப்பாய் பிரதேச விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு சங்கர் முன்னின்று கவனித்து வருகின்றார். [இ-90]

## வெள்ளத்துக்கு 12 பேர் பலி

கொழும்பு ஜூன் 4

நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 12 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது

35 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 மாணவர்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போனார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. [இ-ஏ]

## ஆங்கில - சங்கீத - பட்டதாரி ஆசிரியர் பதவி வெற்றிடம்

ஆங்கில உதவி ஆசிரியர் பதவி, சங்கீத உதவி ஆசிரியர் பதவி, பட்டதாரி ஆசிரியர் பதவி ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி வர்த்தமானியிலேயே இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. [இ-3]

## கொழும்பு மேயராக ரத்னசிறி ராஜபக்ஷ

### கணேசலிங்கம் உதவி மேயர்

கொழும்பு, ஜூன் 4

கொழும்பு மாநகரசபை மேயராக திரு ரத்னசிறி ராஜபக்ஷவும் உதவி மேயராக திரு. எஸ் கணேசலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐ. தே க. கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் உபதலைவர்கள் பற்றிய விவரம் கடந்த ஞாயிறு ஐ தே க. தலைமைக் காரியாலயத்தில் நடந்த சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

## சுன்னாகம் மின்நிலையம் திருத்தப்படமாட்டாது

### கொழும்புக் கூட்டத்தில் முடிவு

விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்த சுன்னாகம் மின் நிலைய திருத்த வேலைகளை இப்போதைக்கு ஆரம்பிப்பதில்லை என்று கொழும்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் அலுவலகத்தில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் நிலைய 132 கே. வி. மின்மாற்றிகளைத் திருத்துவதற்குப் பல கோடி ரூபா தேவையென்றும் தற்போதைய நிலையில் பெருமளவில் பணத்தை செலவிடுவதில் பயன் இல்லை என்றும் கூட்டத்தில் கொழும்பு அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர். [அ-3]

## படையினர் பத்திரிகைகளை பறித்தனர்

நெடுந்தீவு, ஜூன் 4

தீவுப்பகுதி மக்கள் எடுத்துச் சென்ற புதினப் பத்திரிகைகளை நயினாதீவு முகாம் கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது

வழமையாக தீவுப்பகுதி மக்கள் கடற்படையினருக்கு அஞ்சி புதினப் பத்திரிகைகளை எடுத்துச் செல்வதில்லை.

புதினப் பத்திரிகைகளை எடுத்துவர அனுமதிப்பதாக கடற்படையினர் கூறியதை அடுத்தே பிரயாணிகள் புதினப் பத்திரிகைகளை எடுத்துச் சென்று கடற்படையினரிடம் பறிகொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-11]

# 19 வருட போராட்ட வரலாற்றில் 6 போர் நிறுத்தங்கள்

## அத்தனையும் இன ஒழிப்புக்கே என்கிறார் பரா

அராலி, ஜூன் 4

"தமிழீழத்துக்கான 19 வருட போராட்ட வரலாற்றில் நாம் ஆறு போர் நிறுத்தங்களைச் சந்தித்துள்ளோம் இக்காலத்தில் அரசு செய்தது என்ன? தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் மண்பறிப்பு வேலைகளிலும், தமிழரை அழித்தொழிக்கும் பணிக்கான தயாரிப்பு வேலைகளிலுமே அது ஈடுபட்டு வந்துள்ளது".

அண்மையில் அராலிமேற்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் இடம்பெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் கருத்தரங்கில் உரையாற்றும்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளர் திரு. பரா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

தற்போதைய பதினொரு மாதப் போரில் இனவாத அரசு திட்டமிட்ட இன அழிப்பிற்காக பாரிய பொருளாதாரத் தடையை மேற்கொண்டுள்ளது. அத்துடன் வெளிநாடுகளின் உதவியுடன் தனது இராணுவ பலத்தையும் [illegible]

இதற்கெதிராக எமது பலமும் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே சர்வதேச ரீதியில் வளர்ந்துள்ள எமது இயக்கத்துடன் அனைவரும் இணைந்து போராட வேண்டும்.

இந்த மண்ணில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நாம் பங்காளிகளாகவே கருதுகிறோம் போராட்டத்திற்குப் பயந்து வெளிநாடு செல்லாமல் அவர்கள் இங்கே வாழ்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார்.

அராலி கிராமியப் பொறுப்பாளர் திரு. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. லோறன்ஸ், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சபீனா ஆகியோரும் உரையாற்றினர். [இ-த-12]

## நெடுந்தீவுக்கு நிவாரணம்

நெடுந்தீவு ஜூன் 4

நெடுந்தீவுக்கு அரிசி, மா, சீனி உட்பட அத்தியாவசியப் பொருள்களை மனித முன்னேற்றக்கழகம் அனுப்பியுள்ளது

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட் திரு. எம். எம். வி. அமிர்தகுமார் இப்பொருள்களை இங்குள்ள பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்குவார். [இ-11]

## ஆசிரியருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 4

நெருக்கடிகளுக்குப் பின் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ற தலைப்பிலான ஆசிரியர் கருத்தரங்கு இன்று 4 ஆம் திகதி காலை 8 45 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மருதனார்மடம் கல்விக் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் கருத்தரங்கில் பங்கு பற்றுவார்கள் [இ-18]

## சைவ சித்தாந்த ஆய்வுரைகள்

குருநகர், ஜூன் 4

சைவ சித்தாந்த ஆய்வுவட்டம் ஒழுங்கு செய்துள்ள தொடர் ஆய்வுரைகள் நாளை 5 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும்.

யாழ். பிரதான வீதி திருமறைக் கலா மன்ற அரங்கில் ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 5 மணிக்கு பேராசிரியர் கலா. நீ. மரியசேவியர் அடிகள் ஆய்வுரைகளை நடத்துவார்.

5 ஆம் திகதி 'மெய்கண்ட தேவர்', 12 ஆம் திகதி 'அருள்நந்தி சிவாச்சாரியார்', 19 ஆம் திகதி 'திருவிலூர் உய்ய வந்த தேவர்', 26 ஆம் திகதி 'திருக்கடவூர் உய்ய வந்த தேவர்' ஜூலை 3 ஆம் திகதி 'மனவாசகங்கடந்த தேவர்', 10 ஆம் திகதி 'உமாபதி சிவாச்சாரியார்' ஆகிய ஆறு தலைப்புகளில் மேற்படி தொடர் ஆய்வுரைகள் நடைபெறுமென சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் தெரிவித்துள்ளது [இ-51]

## சுகாதார பணிமனை இடம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜூன் 4

நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் இயங்கி வந்த யாழ். மாநகரசபை சுகாதாரப் பணிமனை கடந்த 1 ஆம் திகதி முதல் கண்டி வீதியிலுள்ள 107 ஆம் இலக்க கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. [இ-18]

## யானைகள் அட்டகாசம்

வவுனிக்குளத்தைச் சேர்ந்த கொல்லவிளாங்குளம், நட்டாங்கண்டல், பறங்கியாறுப் பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

கடந்தவாரம் கொல்லவிளாங்குளத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த 6 வயதுக் குழந்தையும், தாயும் யானையால் தாக்கப்பட்டு அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நட்டாங்கண்டல் பகுதியில் ஒருவர் யானையால் தாக்கப்பட்டு, கால்முறிந்த நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [இ-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட குளங்களை புனரமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.மாவட்டத்தில் உள்ள குளங்கள் புனரமைக்கப்பட உள்ளன.

யாழ். அரச அதிபர் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள குளங்களை நீர்ப்பாசனத்துக்கு உகந்த குளங்கள் எனவும் நீரைத் தேக்கி வைக்கக் கூடிய குளங்கள் எனவும் இரு பிரிவுகளாக வகுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சிரமதான அடிப்படையில் குளங்களை புனரமைக்கவும் முடிவாகியது. [இ-5]

## மன்னாரில் ஊரடங்கு

மன்னார் ஜூன் 4
மன்னார் மாவட்டத்தில் மன்னார்த் தீவு, மடுப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று மாலை 5 00 மணியிலிருந்து மறு அறிவித்தல் வரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-த]

## என். ரி. ராமராவ் உடல் நிலை மோசம்

ஹைதராபாத், ஜூன் 4
காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருந்து வரும் முன்னாள் முதலமைச்சர் ராமராவின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் பலவந்தமாக அனுமதிக்கப்பட்டுள்ள ராமராவ் ஐந்தாவது நாளாக நேற்றும் மருந்தும் உணவும் அருந்த மறுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


# ஹோமியோபதி வைத்திய டிப்ளோமா வகுப்புகள்
(D. H. M. S.)

மேற்படி வகுப்புகள் 19 - 06 - 91 இல் ஆரம்பமாகவிருக்கின்றன

தகைமை: க பொ. த (உயர்தரம்)

காலம்: 3 வருடங்கள்

தமிழீழத்தின் தனிப்பெரும் ஹோமியோபதி வல்லுனர்களினால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

மாவீரர் குடும்பம்/போராளிகள் குடும்பம் ஆகியவற்றில் உள்ள தகுதியானவர்களுக்கு இலவசக் கல்வித்திட்டம்.

உங்கள் பதிவுகளுக்கு:
வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்,
அதிபர்,
சாயி மருத்துவக் கல்லூரி,
6, பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை,
(மக்ரவல்ஸ் அருகில்) யாழ்நகர்
[சி 0036]



# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
[யாழ்ப்பாணக் கிளை]
வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
## உறுப்பினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4 30 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையில் அமைந்துள்ள பயிற்சிக் கூடத்தில் நடைபெறும். வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கான தெரிவு நடைபெறும்.

73 கண்டி வீதி, யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர் [C/0079]



# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
[யாழ்ப்பாணக்கிளை]
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
## உறுப்பினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையில் அமைந்துள்ள பயிற்சி கூடத்தில் நடைபெறும். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய செயற்குழு உறுப்பினருக்கான தெரிவு நடைபெறும்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர் [C/0078]


# தியாகி சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
தியாகி சிவகுமாரனின் 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 6 30 மணிக்கு உரும்பிராய் சிவகுமாரர் பூங்காவில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். [உ]

## விழா ஏற்பாடு குறித்து ஆராய கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 4
எதிர்வரும் 6 7,8 ஆம் திகதிகளில் மானிப்பாயில் நிகழவுள்ள முத்தமிழ் விழா தொடர்பான ஒழுங்குகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முத்தமிழ் விழாக் குழுவினர், தொண்டர்களாகத் தம்மைப் பதிவு செய்தவர்கள், விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தொண்டர்கள், விழா சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பாளர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும்படி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் கேட்டுள்ளனர். [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 4
முத்தமிழ் விழா ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று மாலை 5 மணிக்கு கன்னாகம் நாகம்மாள் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமத்தில் உள்ள அனைத்து பொது ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், கழகங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பகீன் கேட்டுள்ளார்.

இதேவேளை —
யாழ்ப்பாண வட்ட வலயப் பகுதியைச் சேர்ந்த கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றும் கூட்டம் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கொழும்பில் பெரு வெள்ளம்

கொழும்பு, ஜூன் 4
தொடர்ந்து பெய்யும் பெருமழையினால் கொழும்பு, காலி மாவட்டங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கொலன்னாவ, மொரட்டுவ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மட்டும் 2, 600 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

[மற்றும் ஒரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

## இ.சே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பரீட்சைத் திணைக்களத்திடம் இது சம்பந்தமாக வடக்கு - கிழக்கு மாகாண சபை தொடர்பு கொண்டது.

யுத்தப் பிரதேசங்களில் பரீட்சை நடத்துவதானால் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவுறுத்தி இருக்கிறது.

அதனால் கிராம சேவையாளர் [illegible] உள்ளது. [அ-3]

## பன்முகப்படுத்தப்பட்ட..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஆலோசனையுடன் தயாரிக்கும் திட்டங்கள், திட்டமிடல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும். அந்த அமைச்சின் ஒப்புதலுடன் அவை திறைசேரிக்கு அனுப்பப்படும்.

பிரமாதப் திட்டங்களை அமுல் செய்வதற்கென ஒவ்வொரு எம். பிக்கும் 25 லட்சம் ரூபா வீதம் மொத்தம் 2 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்படுவது வழக்கம். கடந்த வருடம் அவ்வாறே நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால் இம்முறை எட்டு எம். பிக்களின் பதவிகள் காலியாக உள்ளதால் நிதி ஒதுக்கப்படவில்லை.

எம். பிக்கள் இல்லாத இடத்துக்கு பணம் ஒதுக்கலாமா என்பது குறித்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாம்!

அமைச்சரவையின் அனுமதி கிடைத்தால் மட்டுமே யாழ். செயலகம் சமர்ப்பித்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படும் என்று இங்கிருந்து கொழும்பு சென்ற அதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [அ-3]

## தடுத்துவைக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வெள்ளையன் முத்துமாரி- திருகோணமலை [தற்பொழுது இரட்சணை சேனை இல்லம், அகதி முகாம், மைதடி].

10. நித்தியானந்தன் நிசாந்தன் - மல்லாகம் 11 பீற்றர் சுக்சன் நெல்லியடி 12 ஜோசெப் மைக்கல்- திருமலை [தற்பொழுது மட்டுவில் அகதி முகாம்] 13. சிவகுரு முருகானந்தன் - பருத்தித்துறை 14 தம்பித்துரை விஜயகுமார் - வயாவிளான் 15] பொன்னையா குணபாலசிங்கம் - கொக்குவில்.

16 ஞானப்பிரகாசம் மரியகுலைச் மகுலசிங்கம் - இளவாலை 17 நாகன் பரமநாதன் - மயிலிட்டி வடக்கு [தற்போது இராயசிங்கம் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்] 18. கணேசன் விசுவன்- வண்ணார்பண்ணை 19 கறுப்பையா கிருஷ்ணசாமி - கிளிநொச்சி 20. எட்வேட் ஆலோசியஸ் - யாழ்ப்பாணம்.

21 கம்பிறியல் சிவானிஸ் இரத்தினபுரி 22; முத்துக்குமார் சிவகுமார் - திருமலை [தற்போது மைதடி முகாம்] 23. இன்னத்தம்பி பரிமேலழகன் - பருத்தித்துறை

## சர்வதேச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொலையுண்ட இழக்கு மாகாணத்துக்கு மன்னிப்புச் சபை தூதுக்குழுவினர் விஜயம் செய்ய அனுமதிக்கப்படுவது சந்தேகம் என்று சொல்லப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் நிலவும் நிலைமையைப் பொறுத்தே தூதுக்குழுவினர் கிழக்கே செல்ல அனுமதிக்கப்படுவர் என்று அரச அதிகாரிகள் ஏற்கனவே ஆப்பு வைத்திருந்தனர்.

இதே வேளை மனித உரிமைகள் இலங்கையில் பேணப்படுவதாக தூதுக்குழு மூலம் அறிக்கை ஒன்றைத் தயாரிக்க அரசாங்க அதிகாரிகள் "படாத பாடு" படுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. [அ-8]

## இந்திய---

ஆனாலும் முயற்சி பலன் கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

எனினும்—
இன்னும் இரண்டு தினங்களில் படுகொலையில் ஈடுபட்ட பெண் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டுபிடித்து விடுவதில் தீவிரமாக உதவப்போவதாக புளொட் இயக்கம் அறிவித்துள்ளது.

நேற்றும் கொழும்பில் உள்ள சில தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளுடனும் இந்திய புலனாய்வுக் குழுவினர் பேச்சு நடத்தினர்.


# மரண அறிவித்தல்கள்

## க. தியாகராஜா

க. தியாகராஜா (முன்னாள் M. L. T. ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) 3 - 6 - 1991 இல் காலமானார். இவர் அச்சுவேலி திரு. திருமதி கந்தையாவின் சிரேஷ்ட புதல்வனும் மீனசுலோசனாவின் அன்புக்கணவரும் தியாகசீலி (பேராதனைப் பல்கலைக்கழகம்), தயாசீலி கடசீலி (பேராதனைப் பல்கலைக்கழகம்), கௌரிதஞ்சன், டஞ்சசீலி (வேம்படி மகளிர் கல்லூரி), குணசீலி, சக்திசீலி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு திருமதி சின்னப்பு ஆகியோரின் மருமகனுமாவார். மரணச்சடங்குகள் உடுவிலில் நடைபெறும்.

தகவல்:
பேரம்பலம் சின்னப்பு
முதலைச்சட்டை,
உடுவில் [17046]

## ஞானேஸ்வரன் சிவகாமிப்பிள்ளை

இணுவில் மேற்கைச் சேர்ந்த ஞானேஸ்வரன் சிவகாமிப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானேஸ்வரனின் அன்பு மனைவியும், சபாபதிப்பிள்ளை, இலங்கநாயகம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வநாயகம் (M. Sc. Computer Science, U. S. A) சிறீதரன் (Swiss) செல்வராணி, யசோதரா ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாயினி வரதலட்சுமி, நிற்குணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியா, சத்தியா, மதுரா, குணசீலன், பிரிகா, இந்து, நர்மதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (4 - 6 - 91) நண்பகல் 1 00 மணிக்கு பூவோடை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
[16977] நிற்குணம் - யசோதரா


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org